பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத ஹு புரட்டாதி மீ 17 உ புதன்கிழமை (03-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 13 கதிர் 210

# 12 சிப்பாய்களின் சடலங்கள் கோட்டையில் இருந்து மீட்பு!

## பெற்றோர்களிடம் ஒப்படைக்க விடுதலைப் புலிகள் விருப்பம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 3

**யாழ். கோட்டை மோதலின் போது கொல்லப்பட்ட ஸ்ரீலங்கா படை சிப்பாய்கள் 12 பேரின் சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர். அவற்றை அந்தச் சிப்பாய்களின் பெற்றோர்களிடம் அல்லது உறவினர்களிடம் ஒப்படைக்கத் தாங்கள் தயார் என்றும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட இந்தச் சடலங்கள் தனித்தனியாகப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அறியவந்தது.

இந்த விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ் கோட்டை முற்றுகையை உடைத்து, யாழ் நகரைக் கைப்பற்றி அங்கிருக்கும் வைத்தியசாலையை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவிடம் வழங்கி அதை இயங்கவைக்கப்போவதாக ஸ்ரீலங்கா கூறியது.

ஸ்ரீலங்காப்படை கண்மூடித்தனமாக வான், கடல், தரை

(4ஆம் பக்கம் பார்க்க)

## வேலைக்குத் திரும்பாத தமிழ் ஊழியரின் பதவி காலி!

### அரசின் புதிய கெடுபிடி

திருகோணமலை, அக் 3

கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து இதுவரை வேலைக்குத் திரும்பாத அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் இடங்களுக்கு சமயாசமய அடிப்படையில் கடமையாற்றியவர்களை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதனால் ஆயிரக்கணக்கான தமிழர் வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

கொழும்பில் ஜனாதிபதியின் செயலகத்தில் நடந்த மாநாடு ஒன்றில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கடமையாற்றிய பெரும்பான்மையான தமிழ் அரச ஊழியர்கள் இன்னும் வேலைக்கு திரும்பாத நிலையில் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

வேலைக்கு சமுகமளிக்காதவர்களை வேலை இழந்தவர்களாகக் கருதி, அவர்களது இடத்துக்கு சமயாசமய அடிப்படையில் கடமையாற்றுபவர்களை நியமிக்கவும்-

திணைக்கள தலைவர்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்ப எண்ணிக்கையை விட பங்கீட்டு அட்டைகள் அதிகம்!

யாழ்ப்பாணம், அக் 3

யாழ்- மாவட்டத்தில் சனத்தொகை கணக்கெடுப்பு எண்ணிக்கையிலும் விடக் கூடிய எண்ணிக்கையானோர் குடும்பப் பங்கீட்டு அட்டைகள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்- மாவட்டத்தில் வாழும் மொத்த மக்களுடன் வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களையும் சேர்த்து 2 லட்சத்து 30 ஆயிரம் குடும்பங்களே இங்கு உள்ளன.

இதனால் இந்த எண்ணிக்கைக்கு சமமான பங்கீட்டு அட்டைகளே விநியோகிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இரண்டு லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் பங்கீட்டு அட்டைகளை வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதாவது பத்தாயிரம் அட்டைகள் மேலதிகமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

பல குடும்பங்கள் பொய்யான விவரங்களை கொடுத்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மினிபஸ் சேவைகள் சில நேற்று முதல் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், அக். 3

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் நேற்று மினிபஸ் சேவைகள் ஆரம்பமாகின.

நீண்ட இடைவெளியின் பின்னர் நேற்று மினிபஸ் சேவைகள் இரண்டு பாதைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்றன.

சாவகச்சேரி, மாதகல் பாதைகளிலேயே இந்தச் சேவைகள் இடம்பெற்றன.

மினிபஸ் சேவை இன்று மேலும் சில பாதைகளுக்கு விஸ்தரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## கடத்தப்பட்ட விமானம் வெடிகுண்டினால் சிதறியது!

### 120 பயணிகள் உயிரிழந்தனர்

இருவரால் கடத்தப்பட்ட சீன அரசுக்குச் சொந்தமான விமானம் ஒன்று கன்டன் விமான நிலையத்தில் நேற்று வெடித்துச் சிதறியதில் அதில் இருந்த சுமார் 120 பயணிகளும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த போயிங் 737 ரக விமானத்தை ஷாங்காய் போகும் வழியில் இருவர் கடத்திச் சென்றனர் என்றும்-

கன்டன் விமான நிலையத்தில் அதனை இறக்கிய கடத்தல்காரர்கள், விமானத்தினுள் வெடிகுண்டுகளை வெடிக்க வைத்தனர் என்றும்-

அதனைத் தொடர்ந்து அந்த விமானம் வேறு இரண்டு விமானங்களுடன் மோதி வெடித்தது என்றும் சொல்லப்பட்டது. (உ-எ)

## முத்திரை தருவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், அக் 3

யாழ். மாவட்டத்தில் உள்ள தபாலகங்களில் நிலவும் முத்திரைத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய கப்பல் மூலமாக கொழும்பில் இருந்து முத்திரைகளை எடுத்துவர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ் அரச அதிபரிடம் மாகாண தபால் அத்தியட்சகர் முத்திரைத் தேவை குறித்து தெரிவித்திருந்தார். [இ-3]

## முல்லைத்தீவில் பாடசாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம். அக். 3

முல்லைத்தீவில் நகரப்பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் கடந்த திங்கட்கிழமை முதல் இயங்க ஆரம்பித்தன.

இடம் பெயர்ந்த ஆசிரியர்களும், மாணவர்களும் தாம் தங்கியுள்ள இடங்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் சமுகமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. [இ-6-3]

## நேற்றும் சடலம் கரை ஒதுங்கியது

குருநகர், அக். 3

மற்றொரு ஆணின் சடலம் ஒன்று அழுகிய நிலையில் நேற்று நண்பகல் 12 மணியளவில் கரை ஒதுங்கியது.

அடையாளம் காணமுடியாத நிலையில் காணப்பட்ட இந்தச் சடலம் பின்னர் தகனம் செய்யப்பட்டது.

நேற்று [illegible] வீதியில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியது தெரிந்ததே. (உ-51)

## வவுனியா தாக்குதலில் 2 சிப்பாய்கள் படுகாயம்

விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் வவுனியாப் பகுதியில் இரண்டு ஆயுதப்படையினர் படுகாயமடைந்தனர் என்றும்-

அம்பாறை மாவட்டத்தில் ஒரு பொலீஸ்காரர் கடுமையான காயத்துக்குள்ளானார் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன. [உ-எ]

## வெளிமாவட்ட ஊழியர் கப்பல் மூலம் போக வசதி?

யாழ்ப்பாணம், அக். 3

வெளிமாவட்ட அரச ஊழியர்கள் தாம் பணிபுரியும் இடங்களுக்குச் செல்வதற்கு கப்பல் வசதி செய்துகொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

திருகோணமலையில் மாகாணசபையில் பணிபுரிந்த ஊழியர்கள் 128 பேரையும், மற்றும் தென்பகுதியில் கடமையாற்றும் ஊழியர்கள் சிலரையுமே கப்பல் மூலம் அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டுவருவதாகத் தெரிகிறது.

பிரஸ்தாப ஊழியர்கள் நீண்ட நாட்களாகக் கடமைக்குச் செல்லாததால் பதவியை விட்டு விலகியதாகக் கருதப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

கப்பலில் அனுப்பக்கூடிய ஊழியர்கள் சம்பந்தமான தகவல்களைத் திரட்டும் பணியில் அரச அதிபர் ஈடுபட்டுள்ளார். (*-9)

## ஆசிரியர் சுயவிவரக் கோவை முல்லைத்தீவில் எரிந்துநாசம்

யாழ்ப்பாணம், அக் 3

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு கொத்தணியில் கடமையாற்றும் பெரும்பாலான ஆசிரியர்களின் சுய விவரம் அடங்கிய கோவைகள் எரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தப் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதல்களின்போதே இவை எரிந்து நாசமாகின. [இ 3-6]

## 25 தேவாலயங்கள் சேதம்

யாழ்ப்பாணம், அக். 3

கடந்த மூன்று மாதங்களாக இடம் பற்ற இராணுவ நடவடிக்கைகளால் 25 கத்தோலிக்க தேவாலயங்கள் படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளன. சேதவிவரங்கள் தற்சமயம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

யாழ் மேற்றிராசன ஆயர் இல்லத்தைச் சேர்ந்த வண. ஜெபநேசன் அடிகளார் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ் ஆயர் இல்லம், புனித யாகப்பர், புதுமை மாதா, அடைக்கலமாதா, புனித செபஸ்தியார், சென்ஜேம்ஸ் உட்பட மாவட்டத்தில் தீவுப்பகுதி, வலி வடக்குப் பகுதிகளில் உள்ள தேவாலயங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சேதவிவரங்களைச் சேகரித்து ஸ்ரீலங்கா அரசிடம் சமர்ப்பிக்க இருக்கிறோம் — என்றார் அவர். (இ-3 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் - 2

## சின்னஞ் சிறு விளம்பரம்

### வாடகைக்கு

பாடசாலை மாணவியர்கட்கு உணவுடன் தங்குவதற்கு சகல வசதியுடன் அறை வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு இல. 147, C/o உதயன், யாழ்ப்பணம்.

[14348]

### இடமாற்றம்

அரஸ் ஜவுளியகம் இல. 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம் மண்டேலா ரேடர் (புத்தக சாலை) இல. 2, பஸ்நிலையம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஆகியன தற்போது இல. 256, பருத்தித்துறை வீதி, (நல்லூர் தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இயங்குகின்றன என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

[13938]

### போட்டோஸ்ரட்

சித்ராலயா நிறுவனம் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை தற்பொழுது 351, கோவில் வீதி, நல்லூர், (சம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9.00 தொடக்கம் நண்பகல் 12 வரை செய்து தருகிறார்கள்.

(சி 5227)

# ஹெல்மட்கோல் தலைமையிலே ஐக்கிய ஜேர்மனி இன்று உதயம்

## 45 வருடகால கட்டுப்பாடுகளை 4 வல்லரசுகளும் கைவிட்டன

பெர்லின், அக். 3

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் முடிவில் இரண்டாகிய ஜேர்மனி நாடு இன்று 3 ஆம் திகதி முதல் — 45 ஆண்டு கால இடைவெளியின் பின்னர் — மீண்டும் ஒன்றாகிறது.

இனி ஜேர்மனி என்ற நாடு கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி என்று அழைக்கப்படமாட்டாது; ஐக்கிய ஜேர்மனி என்றே அழைக்கப்படும் புதிய ஜேர்மனியின் முதலாவது பிரதமராக மேற்கு ஜேர்மனியின் பிரதமராக இதுவரை பணிபுரிந்து வந்த திரு ஹெல்மட்ஹோலை, கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி தெரிவு செய்தது

இதனிடையில் — 2 ஆம் உலக மகாயுத்தத்தின் முடிவில் இருந்து ஜேர்மனியின் தலைநகர் பேர்லின் மீது வைத்திருந்த கட்டுப்பாடுகளை நான்கு வல்லரசு நாடுகளான அமெரிக்கா, சோவியத்யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகியன நேற்று முதல் கைவிட்டன,

இது தொடர்பான பிரகடனம் ஒன்றில் நான்கு வல்லரசுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கையெழுத்திட்டனர்

இணைந்த ஐக்கிய ஜேர்மனியின் புதிய தலைவரான திரு ஹெல்மட்கோல் இனி ஐக்கிய ஐரோப்பியாவை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்நாட்சே பேசுகையில், கிழக்கு ஜேர்மனி என்ற நாடு இல்லாமல் போவது குறித்து சோவியத்யூனியன் கவலைப்படவில்லை என்று சொன்னார்.

பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் பேசுகையில், ஐ. நா பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடாக ஐக்கிய ஜேர்மனி தெரிவு செய்யப்படுவது சாத்தியமானதல்ல என்று சொன்னார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் பேசுகையில் — நீண்ட நாளைய கனவு ஒன்று நனவாகுவதாகக் குறிப்பிட்டார்.

பிரகடனத்தில் கைச்சாத்திடும் வைபவம் ஐ நா தலைமைக் காரியாலயததில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது

ஐக்கிய ஐரோப்பாவில் ஜேர்மனி புதிய பொருளாதார பலம் பொருந்திய நாடாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-எ)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, அக். 3

தமிழ் மா நில அகதிகள் பாதுகாப்பு மன்றம் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணி அளவில் ஒரு கலந்துரையாடலை நடத்த உள்ளது.

ஸ்ரீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டோர், இடம்பெயர்ந்தோர், அரசாங்கத்தினால் வேலை நீக்கம் செய்யப்பட்டோர், யாழ். நகரில் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் கடமையாற்றி வன்செயல்களால் வேலை இழந்தோர், வேறு பாதிப்புற்றோர் அனைவரும் கலந்து கருத்துக்களை தெரிவிப்பதற்கும் —

5 லட்சம் தமிழ் மக்களின் கையெழுத்துப் பிரதி இறுதி அறிக்கையைத் தயாரித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்புவதற்கும் — இம் மன்றம் மேற்படி கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளது.

[இ-30]

## வீடுகளுக்கு திரும்புகின்றனர்

குருநகர், அக். 3

குருநகர் பாஷையூர் மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்

குருநகரில் சில பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்வதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

நடை செய்யப்படாத பகுதிகளில் பொதுமக்கள்சென்று குடியிருப்பதுடன் குடியிருப்புக்கான ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர்

சில இடங்களில் வெடிக்காத பீப்பாய் குண்டுகள் இன்னும் அகற்றப்படாத நிலையில் இருந்து வருகின்றன.

(இ- 51)

## மன்னாரில் வங்கிகள் இயங்குகின்றன

மன்னார், செப். 3

மன்னார் மாவட்ட இலங்கை வங்கி, ஹற்றன் தேசிய வங்கி என்பன மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளன

இதனால் காசோலைகளை மாற்ற முடியாது கஷ்டப்பட்ட அரச ஊழியர்கள் பெரும் பயன் அடைந்துள்ளனர். வங்கிகள் தமது வழமையான பணக் கொடுக்கல், வாங்கல் சேவைகளையும் நடத்துகின்றன.

(இ-6)

## ஊழியர் வருகை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், அக் 3

ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டதை அடுத்து யாழ். செயலகம், கல்வித்திணைக்களம் உட்பட பல அரச அலுவலகங்களில் ஊழியர்களின் வருகை அதிகரித்து வருகிறது.

[இ - 3 - 5]

## படையினர் அபகரித்த மோட்டார்கள்

மண்டைதீவில் இருந்து திரும்பிய படையினர் பல லட்சம் ரூபா பெறுமதியான மீன் பிடிப் படகுகளின் வெளி இணை இயந்திரங்களையும், மீன் பிடி வலைகளையும் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர் என்று அப்பகுதி மீனவர்கள் புகார் செய்துள்ளனர்.

மீன் பிடி உபகரணங்களை எடுத்துச் சென்றிருப்பதால் தாங்கள் தொழிலின்றிக் கஷ்டப்படுவதாகவும் அவர்கள் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் புகார் செய்துள்ளனர்.

சுமார் 50 வெளி இணை இயந்திரங்கள், மீன் பிடி வலைகள் ஆகியவற்றை பொது மக்களுக்குச் சொந்தமான இவ் வெளி இணைகளில் படையினர் எடுத்துச் சென்றனர் என்று அறியப்படுகிறது

[இ-3]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும், வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



ஆண்டவன் படைப்பு:
18 - 06 - 1933

அரக்கன் அழிப்பு:
20 - 08 - 1990

வயாவிளான்

### திரு. வைத்திலிங்கம் நடராசா

(பொறுப்பதிகாரி, வலி - கிழக்கு பிரதேசசபை, அச்சுவேலி)

பண்ணிசை உருகிப் பாடுவீர்களே!
சன்னதியான் பாதமலர் மறவீர்களே!
எண்ணிய வெல்லாம் எய்தி எவர்க்கும்
இனியனாய் இதம்பல புரிந்தீர்களே!
மண்ணில் ஏழ் வாங்கு வாழ்ந்ததனை அதனால்
வானுற தெய்வமும் ஆனீர்களே!
உங்களின் ஆசைகள், கற்பனைகள், எண்ணங்களை
எமது உயிர் உள்ள வரை நிறைவேற்றி
உங்கள் காலடியில் கண்ணீர்ப் பூக்களால்
அர்ச்சித்து பிரார்த்தித்து நினைவஞ்சலிகூறுகின்றோம்

எமது அப்பாவின் மரணச் செய்தி அறிந்தவுடன் ஓடோடி வந்து எமது துயரத்தில் கலந்து கொண்டு, ஆறுதல் அளித்து, மலர் வளையங்கள் சாத்தி, கண்ணீர் அஞ்சலி செலுத்தி பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அவரின் உத்தியோகத்தர்கள், ஏனைய பிரதேச சபைகளின் பொறுப்பதிகாரிகள், அச்சுவேலி பிரதேச சபை விசேட ஆணையாளர், சக உத்தியோகத்தர்கள் யாவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அத்துடன் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சி 04-10-1990 ஆந் திகதி வியாழக்கிழமை எமது தற்போதைய அச்சுவேலி இல்லத்தில் நடைபெறுவதால் அதில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்கும்:

**மனைவி, மக்கள், உறவினர்.**

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

[14311]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கந்தையா இரவீந்திரன்

தோற்றம்: 24 - 07 - 1947

மறைவு: 20 - 08 - 1990

நவிலொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடையாளர் தொடர்பு

நினைவு கூரும்:
**ஆசிரியர் கழகம்.**

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

[14350]

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நேசராசா

மாதகலைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நேசராசா (துரைசிங்கம்) 24 - 09 - 90 திங்கட்கிழமை இரவு காலமானார்.

இவர் சின்னத்தம்பி மீனாட்சியின் மூத்த புதல்வனும், கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கார்த்திகேசு, பார்வதியின் அன்பு மருமகனும். மகேந்திரராசா (Register கற்றன்), கிருஸ்ணராசா (ஜேர்மனி), சறோஜினி (ஜேர்மனி), வசந்தாதேவி, கமலாதேவி, றஞ்சினிதேவி (ஜேர்மனி), கோடீஸ்வரன் (சுவிற்ஸலாந்து), கோகிலாதேவி, பவானி (வட்டு இந்துக் கல்லூரி), சுரேஸ், சுரேஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜேஸ்வரி (Clerk கற்றன்), சிவனேஸ்வரி (ஜேர்மனி), சிறீதரன் (ஜேர்மனி), தனசீலன் (சவூதி அரேபியா), மகாதேவன் (பலாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும், துரைசிங்கம், இராசரத்தினம், சின்னத்துரை பரமேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் மூத்த சகோதரரும், செலீலியா, மாணிக்கவாசகர், சந்திரமோகன், சிவம், இராசம், தவமணி ஆகியோரின் மைத்துனரும், சுமித்திரா, சர்மிலி, பிறசன்னா, உஜிவனீ, சுஜிவன், சோபிகா, சோபனா, சுமன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25 - 09 - 90 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

கலட்டித் தோட்டம்,
அராலி தெற்கு.

[14344]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நகருக்குப் புத்துருவம்

யாழ்ப்பாண நகரத்தில் எந்தவித அலுவலையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டாம் என்று அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரட், வர்த்தகர்களையும் பொதுமக்களையும் கேட்டிருக்கிறார்.

கடந்த மூன்றரை மாதப் போரில், யாழ்ப்பாண நகரம் அடையாளம் காண முடியாதவாறு உருவம் மாறியுள்ளது நகருக்குக் கம்பீரத்தையும் பொலிவையும், வனப்பையும் தந்த வானுயர் கட்டடங்கள் தரைமட்டமாகிச் சிதறிப் போயுள்ளன. வளம் நிறைந்து, சீருடன் விளங்கிய வர்த்தகப் பிராந்தியம் மூலியாகி விட்டது.

மொத்தத்தில் நகரம் உருக்குலைந்து சின்னாபின்னமாகியுள்ளது; எழிற்கோலம் அழிந்து சுடுகாடாக மாறியுள்ளது. வானத்தாக்குதல் என்ற கூற்றுவனால் உயிரும், உடலும் சிதைக்கப்பட்டு அழிந்த நகரம் (Ruined City) ஆகிவிட்டது.

யாழ் நகரம் அழிந்து போன சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதனை மக்களின் தேவைக்கேற்ற, வசதியான, இடக்கு முடக்கு இல்லாத விசாலமான, திட்டமிட்ட முறையில் அமைந்த நவீன நகரமாக்கவேண்டும்.

யாழ்ப்பாண நகரத்தின் அமைப்பு காலத்துக்கு ஒவ்வாததாகவும், மக்கள் தொகைக்கு ஈடு செய்யும் அளவுக்கு வசதிகள் அற்றதாகவும் இருந்தது என்பதை எல்லோரும் அறிவர். விசாலமற்ற வீதிகள், நெருக்கம் மிகுந்த கட்டடங்கள், அந்த சந்தம் இல்லாத தோற்றம், சுகாதாரம் சுத்தம் இல்லாத சூழ்நிலை என்பன யாழ்ப்பாண நகரத்தின் குறைபாடுகளில் சில.

எனவே நகரம் ஏற்கனவே இருந்த அமைப்பில், அதே தோற்றத்துடன் மீண்டும் அதனைக்கட்டி எழுப்புவதோ அல்லது புனர்நிர்மாணம் செய்வதோ பொருத்தமற்றது; புத்திசாலித்தனமற்றதும் ஆகும். அதன் பொருட்டு உடைந்த கட்டடங்களை, வர்த்தக நிலையங்களை முந்திய தடவைகள் செய்தது போன்று வழமையான பழக்கப்பட்ட (Routinal) திருத்த வேலைகளைச் செய்து உடனடியாக வியாபாரத்தை அங்கு ஆரம்பிக்க அவசரப்படல் ஆகாது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, யாழ்ப்பாண நகரை, வர்த்தக, போக்குவரத்து, கல்வி, சுகாதார சுற்றுப்புற அழகு மற்றும் பல்துறை வசதிகளையும் மக்களுக்கு அளிக்கக்கூடிய ஒரு நவீன நகராகக் கட்டி எழுப்ப வேண்டும் அதற்கான செயற் கரு இப்போதே வகுக்கப்படுதல் அவசியம்

நாடு நகர நிர்மாணத்தில் கைதேர்ந்த நிபுணர்களின் உதவியுடன், இன்றைய சந்ததிக்கு மட்டுமன்றி எதிர்காலப் பரம்பரையினரின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் புதிய நகரம் ஒன்று, திட்டமிட்ட முறையில், அடிக்கடி மாற்றம் செய்ய வேண்டிய தேவையற்றதாகக் கட்டி எழுப்பப்பட வேண்டும்.

அழிந்த நகருக்கு புத்துயிரும் புத்துருவமும் கொடுக்க வேண்டும். இப்போதே அதற்கான கரு உருவாக்கப்பட வேண்டும் பொதுமக்கள், வர்த்தகர்கள், நிபுணர்கள், மற்றும் சகல தரப்பினாலும் ஆதரவும், ஒத்துழைப்பும் அதற்குத் தேவை.

பக்கம் - 3

# குருநகர் பாசையூர் மக்களுக்கு
# தற்காலிக குடியிருப்பு வசதி

## மனித முன்னேற்ற நிலையம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், அக் 3

குருநகர், பாசையூர், றெக்கிளமேசன் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையால் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுக்க மனித முன்னேற்ற நிலையத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதால் அப்பகுதிகளில் உள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது வீடுகள் அழிக்கப்பட்ட நிலையில் இருக்க இடமின்றிக் கஷ்டப்படுகின்றன.

இவர்கள் தற்காலிகமாக குடியேறி வாழ தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுக்கப்பட இருப்பதாக அந்த நிலைய அதிகாரி தெரிவித்தார். (இ-3-6)

# யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு நிகழ்ச்சி விழா

யாழ்ப்பாணம், அக். 3

'யாழ் இந்துக்கல்லூரி நூற்றாண்டு ஞாபகார்த்த மண்டபத்தை விரைவில் அமைத்து நூற்றாண்டு சின்னமாக அது விளங்க சகலரும் உழைக்க வேண்டும்'

யாழ் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் விஜயதசமியன்று நடைபெற்ற போது கலந்து பேசிய பலரும் மேற்கண்ட கருத்தை வலியுறுத்தினார்கள்.

கல்லூரி வளவில் அமைந்துள்ள சிவஞான வைரவப் பெருமானுக்கு விசேஷ பூசைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கல்லூரி அதிபர் திரு கே. எஸ் குகதாசன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்ச்சியில் முன்னாள் உப - அதிபர் திரு சிவராமலிங்கம், யாழ். கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. தியாகராசா, பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். தங்கராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

பழைய மாணவர் சங்க சார்பில் திரு. சு டிவசலாலா, பாடசாலை அபிவிருத்திச் சங்க சார்பில் திரு. கே பூபாலசிங்கம், ஆசிரியர் கழகம் சார்பில் திரு. ரி. துரைராஜா, மாணவர் கழகம் சார்பில் எஸ். அறிவழகன் ஆகியோர் பேசினார்கள். (இ-3)

# 118 தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், அக் 3

கொழும்பிலிருந்து திங்களன்று வந்த கப்பலில் 118 தபால் பொதிகளும் வந்து சேர்ந்தன. இவற்றை உடனடியாக உரியவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண தபால் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இந்தத் தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை விநியோகிக்கப்படும். (உ-3-5)

# 2 ஆம் கட்ட நிவாரணம் 7 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி

யாழ்ப்பாணம் அக். 3

இரண்டாம் கட்ட நிவாரணத்துக்கான உணவு விநியோகம் இம் மாதம் ஏழாம் திகதிக்கு முன் பூர்த்தி செய்ய வேண்டும்

யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் மேற்கண்டவாறு கூட்டுறவு உதவி ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

இரண்டாம் கட்ட நிவாரணத்துக்காக பெர்மிட் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களின் மீதியும் ஏழாம் திகதிக்குள் வழங்கி முடிக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது (இ 3)

## உத்தேச வரவு செலவு திட்டத்தில்
# 4 துறைகளுக்கு அதிக நிதி

கொழும்பு, அக. 3

1991 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் பாதுகாப்பு, மாகாணசபைகள், வறுமை ஒழிப்பு — புனர்வாழ்வு ஆகிய துறைகளுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணசபைகளுக்கு ஆயிரத்து 605 கோடி ரூபாவும் —

பாதுகாப்புத் துறைக்கு ஆயிரத்து 178 கோடி ரூபாவும் —

வறுமை ஒழிப்பு — புனர்வாழ்வுத் துறைக்கு 720 கோடி ரூபாவும் — உத்தேச வரவு — செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ - எ]

## ஆசிரியர்கள் மூலம் பயிற்சி

கொழும்பு, அக். 3

புதிதாக நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு ஏற்கனவே பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சேவையைப் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

தற்போது பணி புரிந்து வரும் ஆசிரியர்களில் 56 சதவீதமானோர் ஆசிரிய பயிற்சி பெறாதவர்கள் என்றும் அமைச்சர் அத்துலத்முதலி தெரிவித்தார். (இ-எ)

## வ. பி. போ. சபை ஊழியருக்கு

யாழ்ப்பாணம், அக். 3

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சகல சாலைகளையும், அலுவலகங்களையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி (திங்கட்கிழமை) காலை 8.30 மணிக்கு தத்தமது அலுவலகங்களில் தவறாது சமுகமளிக்குமாறு பொது முகாமையாளர் கேட்டுள்ளார். (அ-5)

## கடமைக்கு சமுகமளிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 3

நாட்டு சூழ் நிலை காரணமாக கடமைக்கு வராத வேறு அலுவலகங்களில் தற்காலிகமாக கடமை ஆற்றிய கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரையும் நாளை 4 ஆம் திகதி தத்தமது அலுவலகங்களில் கடமைக்குச் சமூகம் அளிக்குமாறு வட பிராந்திய உதவிப் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளது. (இ

## செய்திச் சாரம்

### தென்மராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கம் உதவி

யாழ்ப்பாணம், செப். 3

தென்மராட்சி பயிலுனர் ஆசிரியர் சங்கம் மட்டுவில் இடம் பெயர்ந்தோர் முகாமுக்கு மூன்று மூடை சம்பா அரிசியை அன்பளிப்புச் செய்துள்ளது.

அத்துடன் கைதடி - நுணாவில் அ. த. க. பாடசாலை முகாமுக்கு உணவுப்பொருள்களையும் உடுப்புகளையும் -

மீசாலை வடக்கு கந்தசாமி கோயில் சமூக சேவா சங்கத்துக்கு உணவுப்பொருள்களையும் அன்பளிப்புச்செய்துள்ளது (இ 7)

### போர்க்கால பாதயாத்திரை

அச்சுவேலி, செப் 3

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமம் பகுதி கலை கலாசாரப் பிரிவினர் போர்கால பாதயாத்திரையை நடத்தி வருகின்றனர்.

ஊர்கள் தோறும் போர்க்கால பாதயாத்திரை நடத்தப்பட்டு கருத்தரங்குகளும் இடம்பெறுகின்றன

இன்றைய நிலையில் தமிழ் இனத்தின் கல்வி, பொருளாதாரம்; பாதுகாப்பு; மக்களின் பங்களிப்பு தொடர்பாக விளக்கவுரை வழங்கப்படுகிறது. (இ-11)

### பருத்தித்துறையில் 'விங்கோ றேடர்ஸ்'

யாழ்ப்பாணம், அக். 3

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன், விங்கோ றேடர்ஸ்'' கப்பல் திங்களன்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

1700 தொன் உணவுப் பொருள்களும், அரசு சார்பற்ற நிறுவனங்களுக்கான பொருள்களும் இந்தக் கப்பலில் வந்துள்ளன.

பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பித்தன. (இ-3 5)

### தென்கொரியா சோவியத் அரசு

லண்டன், செப். 3

தென் கொரியாவுடன் உடனடியாக ராஜதந்திர உறவுகளை ஸ்தாபித்துக் கொள்வது என்று சோவியத் யூனியன் தீர்மானித்துள்ளது. (இ-எ)

### மோட்டார் வாகன அதிகாரம் மாகாண சபைக்கு

கொழும்பு, அக் 3

மோட்டார் வாகன வரி வசூலிக்கும் அதிகாரம் மாகாணசபைகளுக்கு. வழங்கப்பட்டுள்ளது.

இந்த பணி மாகாணசபைகளுக்கே உரியது என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்திருக்கிறார் [இ-எ]

### முந்திரிகைப்பழம் தின்றோர் திடீர் சுகயீனம்

பச்சிலைப்பள்ளி அக் 3

முந்திரிகைப்பழம் சாப்பிட்ட பதினொரு பேர் திடீர் சுகயீனமுற்று சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர்

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் விற்பனை செய்யப்பட்ட முந்திரிகைப் பழத்தை இவர்கள் சாப்பிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது

இ பகீரதன் [வயது 20] அகிலன் [வயது 18], கே இளன் வயது 16], ரவி [வயது 19], க. அருள்தாஸ் [வயது 20], பிறின்ஸ் [வயது 15], மு விஜயலட்சுமி [வயது 35 கர்ப்பிணி], மு. அபிராமி [வயது 3], தாயும் மகளும், பொ. சசிகலா [வயது 4] ம சர்மிளா வயது 7], நகுமரன் [வயது 16]

கடந்த 25 ஆம் திகதி இச் சம்பவம் நடந்தது [இ-117]

### மன்னார் அரச ஊழியருக்கு

யாழ்ப்பாணம், அக் 3

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சகல அரச திணைக்களப் பணியாட்களும் தத்தமது திணைக்களத்துக்கு எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் கடமைக்கு சமூகமளிக்குமாறு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [இ]

# வவுனியாவுக்குமண்ணெண்ணெய் எடுத்துவர கட்டுப்பாடுகள் தளர்வு

வவுனியா, அக் 3

வவுனியா நகருக்குள் பிரவேசிப்பவர்கள் ஒரு பீப்பாய் மண்ணெண்ணெய் கொண்டு வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கச்சேரியில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மற்றைய முடிவுகள் வருமாறு:

★ விவசாய செய்கைக்கு பயன்படுத்தப்படும் காணி, இயந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் விவசாயிகளுக்கு டீசல் வழங்குதல்.

★ வவுனியா - அநுராதபுரம் இ. போ. ச. பஸ் சேவையை ஆரம்பித்தல்.

★ வவுனியா - கொழும்பு ரயில் சேவையை ஆரம்பித்தல்.

★ வவுனியா தாண்டி வழியாக பிரயாணம் செய்ய அனுமதித்தல்.

★ நகரில் உள்ள பாதைத் தடைகளை அகற்றுதல்.

★ கொழும்புக்கு பயணம் தொடரும் மத குருமார்கள் ஆயரின் அங்கீகாரம் பெற்ற கடிதத்தை வைத்திருத்தல். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்-4

# படையினர் கைது செய்த 46 இளைஞரும் எங்கே?

யாழ்ப்பாணம், அக். 3

''மண்டைதீவு, அல்லைப்பிட்டியில் இருந்து படையினர் கடந்த வெள்ளிக்கிழமை வாபஸ் பெறப்பட்ட போதும், அவர்களால் கைது செய்யப்பட்ட 46 இளைஞர்கள் பற்றித் தகவல் இல்லை அவர்களைக் கண்டு பிடித்து உதவ வேண்டும்.''

மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த பெற்றோர்கள் யாழ் - செஞ்சிலுவைச் சங்கத்திடம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளனர்.

யாழ் - செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் அவர்கள் சமர்ப்பித்துள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அல்லைப்பிட்டி தேவாலயத்தில் இருந்து ஆகஸ்ட் 25 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 25 இளைஞர்களும். செப்டெம்பர் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 21 இளைஞர்களும் படையினர் செல்லும் போது விடுதலைசெய்யப்படவில்லை.

அங்கு மேலும் 40 பேரின் சடலங்கள் உருக்குலைந்த நிலையில் கிடப்பதாக அறிகிறோம். அவற்றை அடையாளம் காண முடியாத நிலை உள்ளது.

அங்கிருந்து விடுதலையான சிலரின் தகவலின் படி, கைது செய்யப்பட்டவர்களில் 25 பேர் கப்பலிலேயே படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று அறிகிறோம்.

இந்த விடயத்தில் தலையிட்டு காணாமல்போன இந்த இளைஞர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுத்தர வேண்டும்.

- இப்படி அவர்கள் கோரி உள்ளனர். (இ-3)

# சிமெந்து ஆலை, வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், அக். 3

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை முகாமில் இருந்து ஞாயிறு இரவு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் சிமெந்து ஆலை சேதமடைந்தது.

காங்கேசன்துறை கடற் பகுதியில் இருந்து பீரங்கி வேட்டுக்களும், முகாமில் இருந்து ஷெல்களும் மாவிட்டபுரத்தை நோக்கி ஏவப்பட்டன,

இதனால் சிமெந்து ஆலையும், மாவிட்டபுரம், குமாரகோவிலடி ஆகிய பகுதியில் உள்ள சில வீடுகளும் சேதமடைந்தன. (இ-3)

# மரண அறிவித்தல்கள்

## வைரமுத்து தம்பிராஜா

நல்லூரைப் பிறப்பிடமாகவும், இமையாணன்-உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் திரு. வைரமுத்து தம்பிராஜா அவர்கள் 30-9-90 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் ஜானகியின் அன்புக் கணவரும், த. சிவநாதன் [உதவி முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை-மாங்குளம்], கலாநிதி த. வசந்தகுமார் [மின்சாரப் பொறியியலாளர்-கனடா], திருமதி வி. நிர்மலாதேவி [விரிவுரையாளர்-லண்டன்], த விஜயகுமார் [விரிவுரையாளர்-சாம்பியா] த உதயகுமார் [கணக்காளர்-லண்டன்], த. கலதேவி [ஆசிரியை-உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சி ஞானேஸ்வரி [ஞானம்], வ. ஜெயக்குமாரி [கனடா], நா. விஜயகுமார் [பொறியியலாளர்-லண்டன்], வி அருந்ததி [விரிவுரையாளர்-சாம்பியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், வைதேகி [கனடா], சேரன் [கனடா] ஆகியோரின் அருமைப் பாட்டனாரும், காலஞ்சென்ற வைகந்தையா [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்], வை. வேலுப்பிள்ளை [இளைப்பாறிய தபால் அதிபர்], காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் எள்ளக்குளம் மயானத்தில் 1-10-90இல் தகனம் செய்யப்பட்டது. தயவுசெய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தேவி நிலையம்'
இமையாணன்,
உடுப்பிட்டி.

தகவல்:
த சிவநாதன் [மகன்]
[14349]

## நாகமணி துரைச்சாமி

நாகமணி துரைச்சாமி 2-10-90 இல் காலமானார் இவர் நாகமணி வள்ளியம்மையின் அன்புப் புதல்வனும், கமலத்தின் அன்புக் கணவரும், இராசமலர், பாக்கியலெட்சுமியின் அன்புத் தந்தையும், தியாகராசா (மேற்கு ஜேர்மனி), பொன்னம்பலம் ஆகியோரின் மாமனாரும், மயில்வாகனம், காலம்சென்ற நாகலிங்கம், சிவரெத்தினம், இராசம்மா, நேசம்மா, அருளம்மா, செல்லம்மா, பரமேஸ்வரி, நாகம்மாவின் அன்புத் தமையனாரும்; பிரதீபன், ஜெகதீஷன், சுதீபன், சுகிர்தா, பிரதாசன், தவதாசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-10-90 இன்று நண்பகல் 12. 30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

36 /1, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (13874)

தகவல்:
நா. மயில்வாகனம்

# மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், அக் 3

கடந்த மாதம் 17, 18 ஆம் திகதிகளில் தமது பெயர்களைப் பதிவு செய்த -வெளி மாவட்டங்களைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழ மாணவர்கள்- அனைவரையும் இன்று காலை 9-00 மணிக்கு ஆனந்தகுமாரசாமி விடுதிக்கு சமுகம் தருமாறு மட்டு - அம்பாறை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டிருக்கிறது. [உ]

# 12 சிப்பாய்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் யாழ் நகரில் பொதுமக்கள் வாழும் பகுதியிலும். வைத்தியசாலைமீதும் குண்டுவீசித்தாக்கியதில் யாழ் நகரம் முற்றாக அழிந்துள்ளது. வைத்தியசாலையும் பெருமளவில் சேதமடைந்துள்ளது.

நாலாயிரத்திற்கும் மேற்பட்ட விசேட பயிற்சிபெற்ற சிப்பாய்களையும் நவீன ஆயுதங்களையும், கவசவாகனங்களையும்கொண்ட படையும், 28இற்கும் மேற்பட்ட கடற்படைப் பீரங்கிப்படகுகள், 20 பீரங்கிப்படைப் பிரிவுகள், 8 போர் விமானங்கள், 4 ஹெலிக்கொப்டர்கள் என்பவற்றின் முழுமையான குண்டு வீச்சும் கோட்டை முற்றுகையை உடைத்து யாழ்நகரைக் கைப்பற்றப் பயன்படுத்தப்பட்டன.

இவர்களால் யாழ். கோட்டையிலிருந்து யாழ் நகரை நோக்கி சற்றேனும் முன்னேற முடியவில்லை.

கோட்டை முற்றுகையை முறியடிக்கும் முயற்சியில் செப்டெம்பர் 13 ஆம் திகதி கோட்டையை விட்டு வெளியேற முயன்ற படையினரில் 25 இற்கும் மேற்பட்டோர் கோட்டை வாசலிலேயே கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

கோட்டை வாசலில் உயிரிழந்த படையினரைக்கூட மீட்கமுடியாத நிலையிலேயே சிறீலங்காப் படை செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று யாழ். கோட்டையைவிட்டு ஓடித்தப்பியது.

கோட்டை வாசலில் உயிரிழந்த சிறீலங்காப் படையினர் 12 பேரின் சடலங்களை நாம் எடுத்துள்ளோம். அவற்றை அவர்களின் பெற்றோரிடம் கொடுக்க நாம் தயாராக உள்ளோம்.

அந்த 12 பேரில் களு ஆச்சி கொடித்துவக்கு [தேசிய அடையாள அட்டை இல. 661402156V], கே குமாரசிங்க [படை அடையாள அட்டை எண் 73697], கே. எம். கே. எஸ் பிரேமரத்ன [படை அடையாள அட்டை எண் 67095] ஆகிய மூவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தச் சடலங்களை உரியவர்களிடம் ஒப்படைக்க ஸ்ரீலங்கா தயங்கும் பட்சத்தில் இந்தச் சடலங்கள் எம்மால் தகனம் செய்யப்படும்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம் —

அடையாளம் காணப்படாத மற்றைய 9 சடலங்களுடனும் அவற்றை அடையாளம் காணக்கூடிய விதத்தில் தடயங்கள் மற்றும் பொருள்கள் இருப்பதாகவும் —

இராணுவ வட்டாரங்களினாலும், உறவினர்களாலும் இச் சடலங்களை அடையாளம் காணமுடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

# வேலைக்கு---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சிபார்சுடன் இனி கடமைக்கு சமுகமளிப்பவர்களுக்கு கஷ்ட நிவாரணப்படி வழங்குவதில்லை என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. (உ-3)

# உணவு - மருந்து வகைகளை கிளிநொச்சி அனுப்ப முயற்சி

கிளிநொச்சி மாவட்டத்துக்கு அத்தியாவசிய சேவைகள் நாயகத்தால் லொறிகள் மூலம் அனுப்பப்பட்டு அநுராதபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள உணவு, மருந்துப் பொருள்களை கிளிநொச்சிக்கு அனுப்ப ஒழுங்கு செய்யும் படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் அரச அதிபரே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த ஒரு மாதகாலமாக இந்தப் பொருள்கள் அநுராதபுரம் களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. (இ-3)

# கிளிநொச்சி மாவட்ட தபால் பொதிகள் வந்தன

பூநகரி, அக். 3

கொழும்பில் இருந்து கிளிநொச்சிக்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றி வந்த லொறிகளில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான தபால் பொதிகளும் வந்து சேர்ந்துள்ளன.

கிளிநொச்சிக்கு 19 பொதிகளும், பரந்தனுக்கு 8 பொதிகளும், பூநகரிக்கு 4 பொதிகளும், பளைக்கு ஒரு பொதியும், ஆனையிறவுக்குஒருபொதியும் வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, பரந்தன் தபாலகங்கள் இன்னமும் திறக்கப்படாததினால் இவை யாவும் பூநகரி தபாலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# பூநகரிக்கு 8 லொறிகளில் உணவுப் பொருள்கள்

பூநகரி, அக். 3

பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்துக்கு எட்டு லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

12 லட்சம் ரூபா பெறுமதியான இந்த உணவுப்பொருள்கள் இடம் பெயர்ந்தோர். பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு வழங்கப்படும்.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் ஊடாக 400 மெற்றிக் தொன் மா, போரூட் நிறுவனம் மூலம் இரண்டாயிரம் உணவுப் பார்சல்கள், சர்வோதயம், செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக ரூ 4லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் இவற்றில் அடங்கி உள்ளன.

இந்தப் பொருள்கள் பூநகரி உதவி அரசாங்க அதிபர் மேற்பார்வையில் சிற்றூரவைகளின் சிபார்சின் பேரில் வழங்கப்படும்.

# குடும்ப---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றுக்கு மேற்பட்ட பங்கீட்டு அட்டைகளை பெற்றுள்ளதே இதற்குக்காரணம்.

பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கும்பொருள்களை சில குடும்பங்கள் கூடுதலாகப் பெறுவதாகவும்—

இதனால் வேறு பல குடும்பங்கள் பங்கீட்டுப் பொருள்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறிய வந்துள்ளது. [உ-3]


ஆண்டு 6 தொடங்கி 11 வரையிலான மாணவர்களின் கவனத்திற்கு

அஞ்சல் கல்விச் சேவை
[ வலிகாமம் பிரிவு ]

எமது நிறுவனத்தில் பயின்று கொண்டிருக்கின்ற, இதுவரை எமது நிறுவனத்தில் பயிலாத யாழ். மாவட்டத்தின் வலிகாமம் பகுதியில் வதியும் ஆண்டு 6 தொடங்கி 11 வரையிலான மாணவர்கள் இக் கல்விச் சேவையில் பயில விரும்பின் மாணவர்களின் பெயர்களை அவர்களது பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் 9-10-90 அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

பதிவு ஏற்றுக்கொள்ளப்படும் நேரம்
தினமும் காலை 9-00 — 12-00 மணிவரை.

★ யூனிவேர்சல் ★
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(சி/5229)


# மரண அறிவித்தல்

## திருமதி துரையப்பா வள்ளியம்மை

புங்குடுதீவு ஊரதீவைச் சேர்ந்த திருமதி துரையப்பா வள்ளியம்மை காலமானார். இவர் காலஞ்சென்ற துரையப்பாவின் அன்பு மனைவியும், மனோன்மணி, பரமேஸ்வரி, சிவபாக்கியம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புத்தாயாரும், கதிரவேலு இலகுப்பிள்ளை, செல்லத்தம்பி, நித்தியலட்சுமி ஆகியோரின் மாமியாரும், சிவானந்தி, கோபாலகிருஷ்ணன் (சுவிஸ்), சிவானந்தன், சிவரூபநாதன், செல்வானந்தி, சுரேஸ்காந்தன், கிருபாலினி, ஸ்ரீரங்கன் (மே.ஜேர்மன்), கிருபாலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்,

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-10-90 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கேரதீவு மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
அ. கதிரவேல்

ஊரதீவு,
புங்குடுதீவு. [13875]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 229/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org